# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 15.07.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 2388/SCIC/2026**

திரு ப. சிதம்பரம் மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), ....... பொதுஅதிகார அமைப்பு
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
**சிவகங்கை** - 630 561

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 03.06.2025 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 01.07.2025<br>24.07.2025 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 10.07.2025 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 11.08.2025 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 06.05.2026 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், சிவகங்கை என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 03.06.2025 தேதியிட்டு அனுப்பிய மனுவில் சிவகங்கை மாவட்ட பதிவாளார் மேல்முறையீடு செயல்முறை ஆணை எண்.1/2017 நாள் 25.02.2019 என்பதைக் குறிப்பட்டு, அதுதொடர்பாக 4 இனங்களில் தகவல்கள் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு தெ. ஸ்ரீனிவாசன், பொதுத் தகவல் அலுவலர் (நிர்வாகம்), மாவட்ட பதிவாளர் அலுவலகம், சிவகங்கை ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. மனுதாரரின் 03.06.2025 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு பொதுத் தகவல் அலுவலர் 01.07.2025 தேதியிட்டு தகவல்கள் அளித்துள்ளார். அதனைத்தொடர்ந்து மனுதாரரின் 10.07.2025 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)ன் கீழான மேல்முறையீட்டு மனுவிற்கும் பொதுத் தகவல் அலுவலரே 24.07.2025 மற்றும் 11.08.2025 ஆகிய தேதியிட்டு தகவல்கள் வழங்கியுள்ளார். அதன்பின்னர் மனுதாரர் 20.09.2025 தேதியிட்டு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைத்தொடர்ந்து மனுதாரர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த நிலையில், அவ்வழக்கானது W.P.(MD)No.13425 of 2026 என்ற எண்ணிடப்பட்டு, 29.04.2026 அன்று கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

> "***The learned Standing Counsel appearing for the sole respondent submitted that the petitioner has not submitted the second appeal in the prescribed format, hence, the same cannot be considered. Therefore, the petitioner is directed to submit a fresh appeal in the prescribed format within a period of four weeks the date of receipt of a copy of this order. Thereafter, the respondent shall consider the second appeal and pass orders in accordance to law within a period of four Months there from.***
>
> ***With the above observations, this Writ Petition is disposed of. There shall be no orders as to costs."***

4. நீதிமன்றத்தின் உத்தரவினைத் தொடர்ந்து மனுதாரர் மீண்டும் 06.05.2026 தேதியிட்டு உரிய முறைப்படி இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். மனுதாரரின் மனுவானது ஆணையத்தில் பெறப்பட்ட பின்னர் SA 2388/SCIC/2026 என்று எண்ணிடப்பட்டு, இன்றைய விசாரணைக்கு பட்டியலிடப்பட்டு, ஆணையத்தின் இன்றைய விசாணைக்கு நேரில் ஆஜராகுமாறு தெரிவித்து, மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர்களுக்கு ஆணையத்திலிருந்து விசாரணை அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் தனது மனுவில் கோரிய தகவல்கள் குறித்து அலுவலகத்தில் பராமரிப்பில் உள்ள அனைத்து ஆவணங்கள் மற்றும் நகல்கள் ஏற்கனவே மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் இருவரிடமும் ஆணையத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பொதுத் தகவல் அலுவலரால் தற்போதைய தகவல்கள் அடங்கிய 10.07.2026 தேதியிட்ட கடிதம் விசாரணையின்போது மனுதாரருக்கு வழங்கப்பட்டது. அத்தகவல்கள் ஆணையத்தால் பரிசீலனை செய்யப்பட்ட நிலையில், பொதுத் தகவல் அலுவலர் அதிக முயற்சிகள் எடுத்து, பிற துறைகளிலிருந்து மனுதாரர் கோரிக்கை குறித்து தகவல்களை சேகரித்து வழங்கியுள்ளது தெளிவாகிறது. அத்தகவல்களைக் கொண்டு, மனுதாரர் உரிய பொதுஅதிகார அமைப்பினை அணுகி அவரது

குறையினை தீர்த்துக்கொள்ளுமாறு ஆணையத்தால் மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. **இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2388/SCIC/2026</u>**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
சிவகங்கை - 630 561

**மனுதாரர்**
திரு ப. சிதம்பரம்,
த/பெ CT. பழனியப்பன் செட்டியார்,
1/104 A, நான்காவது தெரு,
சொக்கலிங்கபுரம்,
மதகுபட்டி,

TK/PS